## நன்றித் திருப்பலி

### வருகைப்பாடல்

இதயங்கள் மலரட்டுமே நம்மில்
இன்னிசை முழங்கட்டுமே (2)
இறையருள் வளரட்டுமே அது
இகம் எல்லாம் பரவட்டுமே

1. அன்பிலே மலர்கின்ற விசுவாசம் - அது
குன்றின்மேல் ஒளிர்கின்ற திருவிளக்காம் (2)
நீதியும் உண்மையும் அதன் சுடராம் - 2 அவை
தீதில்லா வாழ்வுக்குச் சான்றுகளாம்

2. அண்ணலே இங்கு நமை அழைத்தார் - இம்
மண்ணிலே பொங்கும் வாழ்வளித்தார் (2)
வரையில்லா வரங்களை நமக்களித்தார் - 2 தம்
கரையில்லாக் கருணையால் நமை மீட்டார்

### தூய ஆவி பாடல்

எல்லா வரமும் நிரம்பித் ததும்பும்
திவ்ய ஸ்பிரித்து சாந்துவே
அடியோர் உள்ளத்தில் எழுந்து வருவீர்
இனிய ஸ்நேக தேவனே (2)

1. உலக இருளை அகற்ற
உமது பரலோக ஒளி தாருமே 2
உம்மைக் கண்டு நன்மை பெற
நாதனே அருள் புரிகுவாய்

2. நன்மை பயக்கும் ஞானக் கொடைகள்
யாவும் அளிப்பாய் பரமனே (2)
நல்வழியை நாங்கள் கண்டு
நற்கதி பெறச் செய்குவாய்

3. ஞானம் புத்தி விமரிசையுடன்
அறிவு திடம் பக்தியும் - 2
தெய்வப் பயமான வரங்கள் ஏழும்
எமக்கு ஈவாயே

ஆண்டவரே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
கிறிஸ்துவே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்
ஆண்டவரே இரக்கமாயிரும்

### வானவர் கீதம்

உன்னதங்களிலே கடவுளுக்கு
மாட்சி உண்டாகுக
உலகினிலே நன்மனத்தோருக்கு அமைதி ஆகுக
உம்மைப் புகழ்கின்றோம்
உம்மை வாழ்த்துகின்றோம்.
உம்மை ஆராதிக்கின்றோம்.
உம்மை மாட்சிப்படுத்துகின்றோம்.
உமது மேலான மாட்சியின் பொருட்டு
உமக்கு நன்றி கூறுகின்றோம்,
ஆண்டவராகிய இறைவா, வானுலக அரசரே
எல்லாம் வல்ல தந்தையாகிய இறைவா
ஒரே மகனாய் உதித்த ஆண்டவரே
இயேசு கிறிஸ்துவே
ஆண்டவராகிய இறைவா,
இறைவனின் செம்மறியே
தந்தையின் திருமகனே,
உலகின் பாவங்களைப் போக்குபவரே,
எங்கள் மேல் இரக்கமாயிரும்
உலகின் பாவங்களைப் போக்குபவரே,
எங்கள் மன்றாட்டை ஏற்றருளும்,
தந்தையின் வலப்பக்கம் வீற்றிருப்பவரே,
எங்கள்மேல் இரக்கமாயிரும்.
ஏனெனில் இயேசு கிறிஸ்துவே,
நீர் ஒருவரே தூயவர்,
நீர் ஒருவரே ஆண்டவர், நீர் ஒருவரே உன்னதர்.
தூய ஆவியாரோடு,
தந்தையாகிய இறைவனின் மாட்சியில்
இருப்பவர் நீரே - ஆமென்.

### பதிலுரைப் பாடல்

திபா 128: 1-2. 3. 4-5 (பல்லவி: 1)

*பல்லவி: ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிநடப்போர் பேறுபெற்றோர்! பேறுபெற்றோர்!!*

### காணிக்கைப் பாடல்

கொடுப்பதன் இன்பம் பெறுவதில் இல்லை
தந்தேன் என்னையே அன்புடனே (2)
சரணடைந்தேனே சரணடைந்தேனே
ஆவியே உம்மிடம் சரணடைந்தேன் (2)
1. தருவதில் பெறுவோம் விண்ணக வாழ்வை
தந்தேன் என்னையே அன்புடனே (2)
2. பொன்னோ பொருளோ என்னிடம் இல்லை
தந்தேன் என்னையே அன்புடனே (2)
3. அப்பமும் ரசமும் தருவதன் வாழ்வில்
தந்தேன் என்னையே அன்புடனே (2)

## திருவிருந்துப்பாடல்

உறவு ஒன்று உலகில் தேடி
அலைந்து நான் திரிந்தேன்
உறவே நீ என்றாய் அன்பு தெய்வமே (2)
உறவே வா உயிரே வா
எழுந்து வா மகிழ்ந்து வா (2)

1. உள்ளமெனும் கோயிலில்
உறவென்னும் தீபமே
வாழ்வென்னும் சோலையில்
வந்திடும் வசந்தமே (2)
அன்பனே நண்பனே உன்னை அழைத்தேன் வா
ஆன்ம உணவே அருளின் வடிவே
அடியேன் இல்லம் வா
உறவின் தெய்வமே என்னில் உறைந்திட வா
அன்பின் சங்கமமே என்னில் தங்கிட வா

2. துன்பமெனும் வேளையில்
அன்புடன் அணைக்கவே
துணையென வாழ்வினில்
என்னுடன் தொடரவே (2)
இறைவனே இயேசுவே இதயம் எழுந்தே வா
நாதனே நேசனே பாசமாய் நீ வா
உறவின் தெய்வமே என்னில் உறைந்திட வா
அன்பின் சங்கமமே என்னில் தங்கிட வா

## திருவிருந்துக்குப்பின்

கிறிஸ்துவின் ஆத்மமே என்னை அர்ச்சியும்
கிறிஸ்துவின் தேகமே என்னை இரட்சியும்
கிறிஸ்துவின் இரத்தமே என்னை பூர்ப்பியும்
திருவிலாத் தீர்த்தமே என்னைத் தூய்ப்பியும்

கிறிஸ்துவின் பாடுகள் என்னைத் தேற்றிட
அருள் நிறை இயேசுவே என்னைக் கேட்டிடும்
அரிய காயங்களுள் என்னை வைத்திடும்
பிரிந்திடா வண்ணமாய் என்றும் கட்டிடும்

பொருது சத்ருவிடம் நின்றே காத்திடும்
மரண வேளையினில் என்னைக் கூப்பிடும்
பரகதியில் நிதம் உம்மை வாழ்த்தவே
வருக வென்றன்போடு என்னை ஏவிடும்
ஆமென்.

வருகை தந்து எம் பிள்ளைகளை ஆசீர்வதித்த உங்கள் யாவருக்கும் எங்களது மனப்பூர்வமான நன்றிகள்!



## வாழ்த்துப்பாடல்

இன்று முதல் உன்னை நான்
ஆசீர்வதித்திடுவேன்
என் சிறகுகளின் நிழலின் கீழ்
உன்னைக் காத்திடுவேன்
உன்னை விட்டு விலகிடாமல்
உன்னோடு என்றுமிருப்பேன்
உன்னை கைவிடாமல்
உனக்கே துணையிருப்பேன்

1. நான் உனது அடைக்கலமும்
ஆற்றலுமாய் இருந்திடுவேன்
உனக்கு முன்னே நான் சென்று
தடைகளெல்லாம் தகர்த்திடுவேன்
பாவங்களை போக்கிடுவேன்
நோய்களை குணமாக்குவேன்
உனது துக்கங்களை சந்தோஷமாய் மாற்றுவேன்
பழையவை மறைந்திடும்
புதுவாழ்வு உன்னைச் சேரும்
என் அன்பினால் உனைக் காப்பேன்
கலங்காதே திகையாதே!

2. போகும்போதும் வரும்போதும்
உன்னை நான் காத்திடுவேன்
நீடிய ஆயுளை உனக்குத் தந்து
நலன்களினால் நிறைவளிப்பேன்
உனக்காக அனைத்தையுமே
செய்து நான் முடித்திடுவேன்
கண்ணின் கருவிழிபோல்
கருத்தாய் உனைக் காப்பேன்
அன்போடு அரவணைத்து
ஆறுதல் நான் தருவேன்
காலமெல்லாம் என் கருணை
உனைத் தொடரும் என் மகனே